# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு
## (திருத்தம்)

**2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

*பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரால் 2013, மாச்சு மாதம் 08 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2013, பெப்புருவரி மாதம் 26 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ *215 ஆம் சட்டமூலம்* ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

***சட்டப்பயன்பற்றிய கூற்று***

***வாசகம் 2*** : இவ்வாசகம், *2011ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க*, துறைமுக, விமானநிலைய *அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது*, களஞ்சியப்படுத்துதல், கட்டியுருவாக்குதல், திருத்துதல், பழுதுபார்த்தல் அல்லது ஏற்றுமதி செய்தல் என்பவற்றுக்காகப் பிணையத்தின் செயலிடமொன்றில் அல்லது அதிலிருந்து இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே நடாத்தப்பட்ட பெற்றோலியத் தொழிற்பாடுகளில் பயன்படுத்தப்படவுள்ள எவையேனும் சாதனங்களையும், உபகரணங்களையும், பொருட்களையும், நுகர்தகு பொருட்களையும் துறைமுக, விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டைக் கொடுப்பனவு செய்வதிலிருந்து விலக்களிப்பதுமாகும்.

***வாசகம் 3*** : இவ்வாசகம், *2011ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க*, துறைமுக, விமானநிலைய *அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 16ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, 2002ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க*, நிதிச் சட்டத்தின் I ஆம் பாகத்தின் *2ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைகளின் செல்லுபடியை நீடிப்பதுமாகும்.*

## துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு
## (திருத்தம்)

ச.வ.ஓ-12/2013

### 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக,விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கான தொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2013ஆம் ஆண்டின் ........ ஆம் இலக்க, துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2011ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க, துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3ஆம் பிரிவைத் திருத்துதல்.

**2.** (1) (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2011ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க, துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு,அதன் (2) ஆம் உட்பிரிவில், அப்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் புதியபந்திகளை இடுவதன்மூலம் இத்தாற் றிருத்தப்படுகின்றது:-

“(அ) பதனிடப்பட்டு மீள் ஏற்றுமதி செய்யும் நோக்கத்திற்கு;

(ஆ) ஏற்றுமதிக்கான பண்டங்களின் உற்பத்திக்கு மூலப் பொருளாகப் பயன்படுத்துவதற்கு; அல்லது

(இ) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே நடாத்தப்பட்ட பெற்றோலியத் தொழிற்பாடுகளில் பயன்படுத்துவதற்கென, ஒரு பிணையத்தின் செயலிடத் தில் அல்லது செயலிடத்திலிருந்து சாதனங்கள், உபகர ணங்கள், பொருட்கள் மற்றும் நுகர்தகுபொருட்கள் என்பனவாகவுள்ளவற்றை, விடயத்துக்கேற்ப, களஞ் சியப்படுத்துவதற்கென, கட்டியுருவாக்குவதற்கென, திருத்துவதற்கென, பழுதுபார்ப்பதற்கென அல்லது ஏற்றுமதி செய்வதற்கென,

(இ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக, “பெற்றோலியத் தொழிற்பாடு” என்ற சொல்லமைப்பு, 2003 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பெற்றோலிய மூலவளங்கள் சட்டத்தின்கீழ் அதற்குக் குறித்தளிக் கப்பட்ட பொருளையுடையதாதல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப் படுகின்றது:-

“2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் I ஏற்புடைய தாகாமை.

16. (1) துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டின் கொடுப்பனவு தொடர்பாக 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் I இன் ஏற்பாடுகள், இலங்கைக்கு வெளியிலான மூலத்தைக் கொண்டதும், 2011, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் இலங்கைக் குள் இறக்குமதி செய்யப்பட்டதுமான ஏதேனும் பொருளுக்கு ஏற்புடையனவாதலாகாது;

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறி ருப்பினும், -

(அ) துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுக் கொடுப்பன விலிருந்து குறித்துரைக்கப்பட்ட பொருட்களுக்கு விலக்களிக்கின்றதும்; அத்துடன்

(ஆ) விதிக்கப்பட்டு அறவிடப்படுவதற்குச் சலுகை ரீதியிலான வீதமொன்றைக் குறித்துரைக்கின்றதும், 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் Iஆம் பாகத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும், 2011, சனவரி 1 ஆந்தேதிக்கு முன்னர்

*வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான ஒவ்வொரு கட்டளையும், 2011ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க, துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், தொடர்ந்து வலுவிலிருத்தலும் வேண்டும்.".*

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்